සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** | **11 ශ්‍රේණිය**
மூன்றாம் தவணைப் பரீட்சை **2020** | தரம் **11**
**Third Term Test 2020** | **Grade 11**

**කතෝලික ධර්මය I**
**கத்தோலிக்க திருமறை I**
**Catholism I**

**පැය එකයි**
**ஒரு மணித்தியாலம்**
***One hour***

பெயர் / சுட்டென் ..........................................................................................................................

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1- 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் மிகவும் பொருத்தமான அல்லது சரியான விடையைத் தெரிவு செய்து உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் உரிய இலக்கத்திற்குப் புள்ளடி (x) இடுக.**

01. திருவிவிலியம் எழுத்துருப்பெற்ற மொழி வடிவம்,
 1. கிரேக்க மொழி 2. இலத்தின் மொழி 3. எபிரேய மொழி 4. ஆங்கில மொழி

02. ''லேவியர்'' நூலின் உள்ளடக்கமாவது,
 1. மோசேயினால் இஸ்ரயேல் மக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பாகும்
 2. பாலைவனப் பயணத்தின்போது மக்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பாகும்
 3. கடவுளே உலகின் படைப்பாளி என்பதை எல்லோருக்கும் எடுத்துரைப்பது
 4. வழிபாட்டின்போது பின்பற்ற வேண்டிய சட்டங்கள், ஒழுங்குகளை உள்ளடக்கியது.

03. தூய பவுலின் பெயரைப் பயன்படுத்தி வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்களின் எண்ணிக்கை
 1. 4 2. 3 3. 7 4. 2

04. இணைத்திருமுறை நூல்களில் அடங்காதது
 1. சாலமோனின் ஞானம் 2. நீதி மொழிகள் 3. தோபித்து 4. யூதித்து

05. திருவெளிப்பாட்டில் 4 என்ற எண் குறித்து நிற்பது
 1. நிறைவு 2. முழு நிறைவு 3. பிரபஞ்சம் 4. இறைமக்கள்

06. ''மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு'' இக்கூற்றுடன் தொடர்புடையவர்
 1. ஏசாயா 2. எசேக்கியேல் 3. எரேமியா 4. நாத்தான்

07. கற்பின் பாதுகாவலர்களாக கருதப்படும் புனிதர்கள் இருவரைக் கொண்ட தொகுதி

1. தூய மரிய கொறற்றி, தூய அக்னெஸ்
2. தூய டொமினிக் சாவியோ, தூய டொன்பொஸ்கோ
3. தூய மரிய கொறற்றி, தூய யூதா ததேயு
4. தூய லூசியா, தூய லோரன்சியா

08. மனிதர் கொண்டுள்ள இருவகை நோக்குகள்

1. அகநோக்கு, உள்நோக்கு 2. அகநோக்கு, சிந்தனை நோக்கு
3. புறநோக்கு, வெளிநோக்கு 4. அகநோக்கு, புறநோக்கு

09. மனிதர் இறைவனின் சாயல், ஏனைய படைப்புக்களை விட சிறந்தவர் என்பதற்கான காரணம்

1. பேசத் தெரியும் என்பதால் 2. அழகான உடல், உயிரை கொண்டிருப்பதால்
3. அழியாத ஆன்மாவை கொண்டிருப்பதால்
4. சிந்தித்து செயலாற்ற தெரியும் என்பதால்

10. தொடக்க கால திருச்சபையில் திருத்தொண்டரை நியமித்தலின் போது பொருத்தமற்றதாக காணப்படுவது

1. நற்சான்று பெற்றவர் 2. மூப்பராக இருத்தல்
3. தூய ஆவியின் அருளும் வல்லமையும் பெற்றவர்
4. ஞானம் நிறைந்தவர்

11. "திருடர், பேராசையுடையோர், குடிவெறியர், பழிதூற்றுவோர், கொள்ளையடிப்போர் ஆகியோர் இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வதில்லை" என பவுல் கூறும் திருமுகம்,

1. கொரிந்தியர் 2. எபேசியர் 3. பிலிப்பியர் 4. தெசலோனிக்கர்

12. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தா ……………………. ஆவார்.

1. ஆதாம் 2. ஆபிரகாம் 3. மோசே 4. நோவா

13. "ஜோர்ச் மாரியோ பர்காலியோ" எனும் இயற்பெயரைக் கொண்ட திருத்தந்தை

1. 2ம் ஜோன் பவுல் 2. 16வது பெனடிக் 3. 1ம் பிரான்சிஸ் 4. 23ம் சின்னப்பர்

14. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்துவ குடும்பங்களும் பங்கேற்க வேண்டிய முப்பணிகள்

1. இறைவாக்குப்பணி, மேய்ப்புப்பணி, குருத்துவப்பணி
2. இறைவாக்குப்பணி, குருத்துவப்பணி, புனிதப்படுத்தும் பணி
3. மேய்ப்புப்பணி, ஆயத்துவப்பணி, வழிநடத்தும் பணி
4. அரச பணி, வழிநடத்தும் பணி, மேய்ப்புப்பணி

15, 16, 17 ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி விடையளிக்குக.

A – குடும்பத்தில் இறைவார்த்தையை வாசித்தல்

B – பிள்ளைகளை அறநெறியில் வளர்த்தல்

C- மறைக்கல்வி கற்பித்தல்

D – குடும்பச் செபம் செய்தல்

E – ஆலயப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுதல்

F – திருப்பலி மற்றும் அருட்சாதனங்களில் குடும்பமாக பங்கேற்றல்

15. மேற்கூறியவற்றில் இறைவாக்குப் பணியை குறித்துக்காட்டும் தொகுதிகள்

1. A யும் D யும் 2. E யும் F யும் 3. C யும் F யும் 4. A யும் C யும்

16. மேற்கூறியவற்றில் குருத்துவப்பணியை குறித்துக்காட்டும் தொகுதிகள்

1. D யும் F யும் 2. A யும் B யும் 3. D யும் C யும் 4. E யும் F யும்

17. மேற்கூறியவற்றில் மேய்ப்புப்பணியை குறித்துக்காட்டும் தொகுதிகள்

1. A யும் C யும் 2. A யும் B யும் 3. B யும் E யும் 4. C யும் D யும்

18. "ஆண்டவரே! என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கியருளும் என்னும் செபத்தை செபித்த புனிதர்.

1. புனித டோமினிக் 2. ஆசிசி நகர் தூய பிரான்சிஸ்

3. தூய கொன்சாகா 4. தூய இஞ்ஞாசியார்

19. குருத்துவம் சாராத துறவிகளை கொண்ட தொகுதி

1. மாறிஸ் சகோதரர்கள் சபை, அமல மரித்தியாகிகள் சபை

2. அன்பின் சகோதரர் சபை, கிளரேசியன் சபை

3. அன்பின் சகோதரர் சபை, தூய ஜோன் பப்ரிஸ் டிலாசால் சகோதரர் சபை

4. பிரான்சிஸ்கன் மறைதூதச் சகோதரர் சபை, இயேசு சபை

20. திருமணம் எனும் அருளடையாளத்தை நிறைவேற்றுவோர்

1. கடவுள் 2. இயேசு 3. திருமணத் தம்பதியினர் 4. குரு

21. புதுமைகள் இடம் பெறுவதற்கு மிக அவசியமானதென நீர் கருதுவது

1. எதிர்நோக்கு 2. அன்பு 3. ஆர்வம் 4. நம்பிக்கை

22. கிறிஸ்துவைப் பின்பற்றி முன்மாதிரியாக வாழ விரும்பும் நீர் கடைபிடிக்கக்கூடிய ஆன்மீக இரக்கச் செயல்களில் ஒன்று

1. குற்றங்களை மன்னிப்பது 2. நோயாளரை தரிசிப்பது

3. சிறையிலிருப்போரை தரிசிப்பது 4. பசித்திருப்போருக்கு உணவு அளிப்பது

23. நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ……………………………………….. இடைவெளிக்கு பொருத்தமான இறைவார்த்தை

1. ஆறுதல் பெறுவர் 2. நிறைவு பெறுவர்

3. கடவுளின் மக்கள் எனப்படுவர் 4. இரக்கம் பெறுவர்

24. மில்ரன் என்பவர் ஞாயிறு தினங்களிலும், கடன் திருநாட்களிலும் தவறாது திருப்பலிக்கு செல்வார். தனது பாவநிலை உணர்ந்து ஒப்புரவு அருளடையாளம் பெற்றுக்கொள்வார். திருச்சபையின் செயற்பாட்டிற்கு உதவுவார். இவர் கடைபிடித்த சட்டங்கள்.

1. மோசையின் சட்டங்கள் 2. ஆரசாங்க சட்டங்கள்

3. ஆலய சட்டங்கள் 4. திருச்சபையின் சட்டங்கள்

25. "Holy Eucharist" என்பது,

1. திருவிவிலியம் 2. புனித நற்கருணை 3. திருச்செபமாலை 4. திருச்சுருபம்

26. ஆயர்களை நியமிப்பது.

1. திருத்தந்தை 2. இறைமக்கள் 3. குருக்கள் 4. துறவியர்

27. "சபாத்" நாளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் மரபு

1. குருமரபு 2. யாவே மரபு 3. இணைச்சட்டம் 4. எலோகிம் மரபு

28. மரியாயின் சேனையை ஆரம்பித்தவர்.

1. பிறடிக் ஒளனம் 2. திரு பிராங்டப்

3. யாக்கோமே கொன்சால்வேஸ் 4. திரு பிரான்சிஸ்

29. திருச்சபையினால் மனமாற்றத்தின் காலங்களாகக் குறிப்பிடப்படும் காலங்கள்

1. பொதுக்காலம், தவக்காலம் 2. பாஸ்கா காலம், மீட்பின் காலம்

3. திருவருகைக்காலம், தவக்காலம் 4. பாஸ்கா காலம், தவக்காலம்

30. போர்த்துக்கள் நாட்டில் பாத்திமா நகரில் தேவ அன்னை காட்சியளித்த சிறுவர்கள் மூவரும்

1. லூசியா, பெர்ணதேத், ஜோன் 2. ஜசிந்தா, பிரான்சிஸ்கோ, பேர்ணதெத்

3. ஜோன், ஜசிந்தா, பிரான்சிஸ்கோ 4. லூசியா, ஜசிந்தா, பிரான்சிஸ்கோ

31. "மிஸ் டேறியும் பிடையி" என்ற சுற்றுமடலுக்குறியவர்

1. திருத்தந்தை 23ம் சின்னப்பர் 2. திருத்தந்தை 6வது பவுல்

3. திருத்தந்தை 2ம் ஜோன் பவுல் 4. திருத்தந்தை 9வது பியூஸ்

32. "குவைட்ரிசம்" என்ற வேத பேதகம் உருவாகிய காலம்

1. 13ம் நூற்றாண்டு 2. 17ம் நூற்றாண்டு 3. 19ம் நூற்றாண்டு 4. 15ம் நூற்றாண்டு

33. தியானத்தின் வரலாற்றில் 2ம் படிமுறை அழைக்கப்படுவது

1. கொண்டம்பிலாசியோ 2. ஒராசியோ 4. மெடிடாசியோ 4. லேக்சியோ

34. ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப்பகுதியை ஆட்சி செய்த காலம்

1. கி.பி. 1658 – 1796 2. கி.பி 1505 – 1658 3. கி.பி. 1796 – 1948 4. கி.பி. 1788 – 1815

35. உண்மையைக் கடைபிடிக்கவும், உண்மைக்கு சான்று பகிரவும் நம்மை வழிப்படுத்துவது

1. 3ம் கட்டளை 2. 8ம் கட்டளை 3. 9ம் கட்டளை 4. 10ம் கட்டளை

36. பிற இனத்தவரின் திருத்தூதர் எனப் போற்றப்படுபவர்

1. தூய பேதுரு 2. தூய பர்னபா 3. தூய பவுல் 4. தூய மாற்கு

37. ''கால் நடைசாவு'' எத்தனையாவது துன்பமாக வழங்கப்பட்டது.

1. 3 வது 2. 9 வது 3. 4 வது 4. 5 வது

38. செபமாலை என்பதன் ஆங்கிலச் சொல் ''றோசரி'' என்பது போல, அதன் இலத்தீன் சொல்

1. சொசாரியுஸ் 2. றொசாரியும் 3. றோசாரியும் 4. றொசாரியுங்கும்

39. ''உன் கடவுளாகிய ஆண்டவரை சோதிக்க வேண்டாம் என்று சொல்லியுள்ளதே'' என இயேசு எக்கேள்விக்கு பதிலளித்தார்.

1. நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும்.

2. நீர் இறைமகன் என்றால் கல்லை அப்பமாக்கும்

3. நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையதாகும்

4. நீர் இறைமகனானால் என்னை வணங்கும்

40. மேறி தினமும் காலையில் எழுந்தவுடன் செபித்து தன் கடமைகளை நிறைவேற்றி பெற்றோரை வணங்கி நேரத்துடன் பாடசாலை சென்று, எல்லோருடனும் அன்பாக பழகுகிறாள். இவரது வாழ்வு மூலம் கிடைக்கும் செய்தி

1. நன்கு படிக்க வேண்டும் என்றால் எல்லோருடனும் பழக வேண்டும்

2. பெற்றோரை வணங்கினால் கேட்பது கிடைக்கும்

3. இறைவனையும் பெற்றோரையும் உயர்வாக மதிக்கும் போது ஏனையோரை இயல்பாக அன்பு செய்ய முடியும்.

4. இறைவனுக்கும், பெற்றோருக்கும் பயத்தில் கடமைகளைச் செய்ய வேண்டும்.